# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## VAC NO. 21 / 2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW<br>Defence<br>Court |

Name : Tmt. Mageswari Ravikumar

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 23rd day of January, 2026.

**(A2 present, A1 absent, Petition filed and allowed.)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.30 மணி

**(சாட்சி காணொளியில் ஆஜராகிறார்)**

நான் தற்போது தமிழ்நாடு கைத்தறி துறையில் இயக்குனராக பணிபுரிந்து வருகிறேன். நான் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியராக 24-08-2018 முதல் 29-10-2020 வரை பணிபுரிந்து வந்தேன். அந்த காலத்தில் அரசு தரப்பில்

இளநிலை உதவியாளர் திரு. பரந்தாமன் என்பவருக்கு இசைவாணை கேட்டு 28-11-2019 அன்று வேண்டுகோள் கடிதம் இயக்குனர் DVAC அவர்களிடமிருந்து எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டது. மேற்படி வேண்டுகோள் கடிதத்துடன் புகார், முதல் தகவல் அறிக்கை, ஒப்புடைப்பு மகஜர், கைப்பற்றுதல் மகஜர், விசாரணை அறிக்கை, சாட்சியின் வாக்குமூலங்கள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலங்கள், FSL Report, வழக்கு சம்பந்தப்பட்ட மற்ற ஆவணங்களும் பெறப்பட்டன. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்ததில் புகார்தாரர் ராஜகோபாலின் மனைவி லதா அவர்கள் பெயரில் அரிசி ஆலை தொடங்குவதற்கு கட்டிட அனுமதி கேட்டு பள்ளிப்பட்டு பேரூராட்சியில் மனு கொடுத்ததாகவும், அப்போது செயல் அலுவலராக அங்கு பணியாற்றிய ஜானகிராமன் மற்றும் இளநிலை உதவியாளர் பரந்தாமன் ஆகியோரை அணுகியுள்ளார். மேற்படி நபர்கள் புகார்தாரரிடம் ரூபாய் 1.5 லட்சம் லஞ்சம் கேட்டதாக தெரிவித்துள்ளார். மேற்படி பணத்தை கொடுக்கமுடியாது என்றவுடன் அவர் ரூபாய் 1 லட்சம் கேட்டுள்ளார். மேற்படி ரூபாய் 1 லட்சத்தை 23-11-2018 அன்று பள்ளிப்பட்டு பேரூராட்சி அலுவலகத்தில் புகார்தாரர் கொடுக்கும்போது இருவரும் கையும் களவுமாக லஞ்ச ஒழிப்புதுறை அலுவலர்களால் பிடிபட்டுள்ளார்கள். அப்போது அரசு சாட்சியும் உடனிருந்தார். மேற்படி ஆவணங்களை ஆய்வு செய்து சில சங்கதிகளை புலன்விசாரணை அதிகாரியிடம் 21-01-2020 தேதி நேரில் கேட்டறிந்து தெளிவுபடுத்திய பிறகு திரு. பரந்தாமன் அவர்கள் புகார்தாரரிடமிருந்து கட்டிட அனுமதி பெறுவதற்காக பணம் பெற்றுள்ளார் என்பதனை ஆவணங்களின் அடிப்படையிலும் புலன் விசாரணை அதிகாரியிடம் நேரடியாக விசாரணை செய்ததன் அடிப்படையிலும் உறுதி செய்து திருப்தி அடைந்ததால் குற்றம் சாட்டப்பட்ட திரு. பரந்தாமன் அவர்களை பணிநீக்கம் செய்யும் அதிகாரி என்ற முறையில் அவருக்கு எதிராக குற்ற வழக்கு பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் இசைவாணை வழங்கினேன். மேற்படி இசைவாணையை RC.No. 3799/2018/A2 dated 15-09-2020 வழங்கினேன். மேற்படி இசைவாணை **அ.த.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இசைவாணையை ஊழல்தடுப்பு சட்டம் பிரிவு 19(1)(c) ன் படி உரிய அதிகாரம்

பெற்ற அலுவலர் என்ற முறையில் என்னால் வழங்கப்பட்டது. என்னை இவ்வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் திருமதி. கீதா என்பவர் 06-11-2020 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கின் படி புகார்தாரர் புகார் கொடுத்த தேதி 22-11-2018 என்றால் சரிதான். இந்த ஊழல் தடுப்பு அதிகாரிகள் Trap நடத்திய தேதி 23-11-2018 என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னிடம் வந்த அனைத்து ஆவணங்களையும் நான் படித்து பார்த்து பரிசீலனை செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி வழக்கின் விசாரணையை 27-03-2019 ல் விசாரணையை முடித்து என்னிடம் இசைவாணை பெறுவதற்காக ஆவணங்களை சமர்பித்தார் என்றால் 28-11-2019 அன்று இசைவாணை கேட்டு எனக்கு வேண்டுகோள் கடிதம் வந்தது. 23-11-2018 அன்று எதிரிகளை கைது செய்த பிறகு என்னிடம் இசைவாணை கேட்டு கடிதம் வரப்பெற 1 வருடகாலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இசைவாணை வழங்குவதற்கு வழக்கின் விசாரணை அதிகாரியை விசாரித்தபோது 1 வருட காலதாமதம் குறித்து நான் விசாரணை செய்தேனா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய அறிக்கையில் அதுகுறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 28-11-2019 அன்று நான் பெற்ற கடிதத்தின் பேரில் நான் இசைவாணை வழங்கிய தேதி 15-09-2020 என்றால் சரிதான். மேற்படி 11 மாத காலதாமதத்திற்கான காரணத்தை என்னுடைய இசைவாணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய இசைவாணைக்கு நான் RC.No. 3799/2018/A2 dated 15-09-2020 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது என்னுடைய அலுவலக RC எண் என்றால் சரிதான். என்னிடம் வேண்டுகோள் கடிதம் பெற்றது 2019 ல் தான் என்றால் சரிதான். ஆனால் எதிரிகளை கைது செய்து பணிநீக்கம் செய்தவுடன் RC எண் கொடுத்துள்ளோம். எதிரியை கைது செய்தபோது கொடுக்கப்பட்ட RC எண் என்று இசைவாணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் விவரங்களின் படி புகார்தாரர்

2 ஆம் எதிரியிடம் பணம் கொடுக்கும்போது பணத்தை ஒரு கவரிலிருந்து பணம் எடுத்து கொடுத்தார் என்றுள்ளது அந்த கவர் என்ன ஆனது, அந்த கவர் கைப்பற்றப்பட்டதா என்று எனது விசாரணையில் அறிந்துகொண்டேனா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. அந்த கவரை குறித்து என்னுடைய இசைவாணையில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் ஆவணங்களின் படி 23–11–2018 காலை 7.00 மணிமுதல் எதிரிகளுடைய அலுவலகத்திற்கு சென்று காலை 11.15 மணிக்கு புகார்தாரர் ஊழல் தடுப்பு அதிகாரியுடன் இருந்தார் வேறு எங்கும் சென்றதாக ஆவணங்களில் இல்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் பணம் கொடுக்கப்பட்ட பிறகு ஊழல் தடுப்பு அதிகாரிகள் உரிய நடவடிக்டிகை எடுத்தார்கள் என்றால் சரிதான். அன்றைய தேதியில் புகார்தாரருடைய மனுவின்பேரில் அரசிற்கு செலுத்தவேண்டி ரூபாய் 58,960/– செலுத்தப்பட்டு ரசீது வழங்கப்பட்டுள்ளது அதில் எதிரிகள் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த தொகை யாரால் எப்பொழுது செலுத்தப்பட்டது என்ற விவரத்தை ஆவணங்களின் அடிப்படையிலோ, விசாரணை அதிகாரியிடம் விசாரணை செய்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் எதிரிகள் பணிபுரிந்த அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலகர்கள் குருமூர்த்தி, பாலாஜி ஆகியோரின் வாக்குமூலங்கள் எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். அதில் ரூபாய் 58,960/–க்கான ரசீது தயாரிக்கப்பட்டது என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பணம் எப்போது செலுத்தப்பட்டது என்பதற்கு குறிப்பிடும் அளவிற்கு ஆவணம் எதுவுமில்லை என்றால் சரிதான். மேலும் இந்த வழக்கின் ஆவணங்களை பொறுத்தவரை புகார்தாரிடம் ரூபாய் 1 லட்சம் தவிர வேறு பணம் இருந்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். ஆனால் ஜானகிராமனின் அறையில் ரூபாய் 30 ஆயிரம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2 ஆம் எதிரி இளநிலை உதவியாளர் என்றால் சரிதான். அவருக்கு Licence கொடுக்கவோ, அதற்குண்டான உத்தரவு பிறப்பிக்கவோ அதிகாரமில்லை என்றாலும் மனுவை ஏற்றுக்கொள்ளவோ, மனுவை தள்ளுபடி செய்ய அதிகாரம் இல்லை என்றால்

சரிதான். அவர் கோப்பினை தயார் செய்து உரிய உயர் அதிகாரியிடம் உத்தரவு வாங்குவதற்காக சமர்பிப்பார். 2018 காலகட்டத்தில் நான் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியராக பணியில் இருந்தபோது கொடி நாளுக்காக ஒவ்வொரு அலுவலகத்திலும் குறிப்பிட்ட தொகையை வசூல் செய்து அனுப்பவேண்டும் என்ற சுற்றறிக்கை அந்த காலகட்டத்தில் அனுப்பப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆனால் அதற்குரிய ரசீது போட்டு கொடுப்பார்கள். அந்த காலகட்டத்தில் பள்ளிப்பட்டு பேரூராட்சிக்கு 3 லட்சம் ரூபாய் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. கொடி நாள் வசூலை யாரிடமிருந்து வசூல் செய்ய வழிகாட்டி நெறிமுறை Armed Forces Flag Day D.D. பெற்றுக்கொள்ள உத்தரவிட்டிருந்தேன். விருப்பப்பட்டு கொடுப்பவரிடம் பெற்றுக்கொள்ளலாம். AD Proceedings போடுவார். அலுவலகத்தில் பெறப்படுகின்ற மனுதாரர்களிடம்இந்த கொடி நாள் என்று கூறி அவர்களிடம் விரும்பினால் கொடி நாளுக்காக பணம் கொடுக்கலாம் என்றால் சரிதான். யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. ரசீது கொடுக்கப்பட வேண்டும். பள்ளிப்பட்டு பேரூராட்சி அலுவலகத்தில் அந்த காலகட்டத்தில் ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரத்திற்கு மேல் கொடி நாள் பணம் வசூல் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் என்னால் கூறமுடியும். இந்த வழக்கின் புகார்தாரர் அவரிடம் கொடிநாளிற்காக கேட்ட பணத்தை கொடுப்பதற்காக தான் பணம்எடுத்துவந்தார் என்றாலும் அந்த பணத்தை கொடுத்தவுடன் ரசீது போடுவதற்கு முன்பதாகவே எதிரியை ஊழல் தடுப்பு அதிகாரிகள் குழுவோடு வந்து பிடித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்னுடைய அதிகாரத்திற்கு கீழ் இருக்கிற பள்ளிப்பட்டு பேரூராட்சி அலுவலத்தில் உள்ள அலுவலர்கள் யாரையாவது விசாரித்து இந்த வழக்கின் உண்மைதன்மை தெரிந்துகொண்டேனா என்றால் அவர்களை விசாரிக்கவில்லை. ஆவணங்களை மட்டும் தான் பரிசீலனை செய்தேன். எதிரிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்ட ஆவணங்களை மட்டும் தான் நான் பரிசீலனை செய்தேன் என்றாலும் சம்பந்தப்பட்ட அலுவலர்களை விசாரணை செய்திருந்தால் வழக்கின் உண்மைதன்மை தெரிந்திருக்கும்

என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1ஆம் எதிரிக்கு கொடுக்கப்பட்ட இசைவாணையை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. நான் வழங்கிய இசைவாணையை என்னுடைய முழு மனதையும் செலுத்தி வழங்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. ஊழல் தடுப்பு அதிகாரிகள் தயார் செய்து கொடுத்த இசைவாணையை நான் என் முழு மனதையும் செலுத்தாமல் இசைவாணை வழங்கியுள்ளேன் என்றாலும் ஆகவே நான் வழங்கிய இசைவாணை ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.